# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6

## மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு – மார்ச் – 2025

## தமிழ் விடைக்குறிப்புகள்

**விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்ற வேண்டும்.**

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்ப்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. தவறான விடைகளைக் (X) குறியிட்டும், தொடர்ப் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியானக் கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடை இருப்பின் ‘‘மிகை’’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ‘‘மீண்டும்’’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

பகுதி –1

மதிப்பெண்கள்– 90

| வ. எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| I | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** | 14 x1 = 14 |
| 1 | பொருத்துக<br>(அ) ஆதிநீடல் – காரிருள்<br>(ஆ) அடிஅகரம் ஐ ஆதல் – பைங்கூழ்<br>(இ) இனமிகல் – பெருங்கொடை<br>(ஈ) முன் நின்ற மெய் திரிதல் – செங்கதிர்<br>(வினாவைத் தேர்வு செய்திருப்பின் ஒரு மதிப்பெண் வழங்கலாம்) | 1 |
| 2 | (அ) ஊருக்கு உதவுவது | 1 |
| 3 | (ஈ) இரண்டும் சரி | 1 |
| 4 | (ஈ) 45 | 1 |
| 5 | (இ) ஆசிரியர் | 1 |
| 6 | (அ) மறதியால் கெட்டவர்களை | 1 |
| 7 | (ஆ) செம்மொழி | 1 |
| 8 | (அ) யானை டாக்டர் – குறும்புதினம் | 1 |
| 9 | (ஆ) வினை | 1 |
| 10 | (அ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும் | 1 |
| 11 | (ஈ) பண்புத்தொகை | 1 |
| 12 | (ஈ) மசானபு ஃபுகோகா | 1 |
| 13 | (ஈ) இதழ் | 1 |
| 14 | (அ) மல்லி + இலை – உயிர் + மெய் | 1 |
| | பகுதி–II<br>பிரிவு–I<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | 3 x 2 = 6 |
| 15 | பாயிரம்<br>• நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பு<br>• நூல் வழங்கும் கருத்து வளம், நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரம் ஆகும். | 1<br>1 |
| 16 | **மருந்து – மருந்து மரம்**<br>• மருந்து – பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம்.<br>• மருந்து மரம் – பெருந்தகையாளன். | 1<br>1 |
| 17 | • மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்.<br>• லிட்டன் பிரபு எழுதிய ‘‘இரகசிய வழி’’ என்ற நூலைத் தழுவி பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார்.<br>• எளிய நடையில் ஆசிரியப்பாவால் அமைந்தது.<br>• ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது.<br>• நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது.<br>• மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை ‘‘சிவகாமியின் சரிதம்’’.<br>**(எவையேனும் இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |

| | | |
|---|---|---|
| 18 | மதீனா நகரம் – மாளிகை நகரம்<br>• மேருமலையினைப்போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.<br>• அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலிபோன்று இருந்தது.<br>• மதீனா நகரின் வீதிகள் பேரண்டத்தைப் போன்று பரந்திருந்தன.<br>• மதீனாவில் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.<br>**(எவையேனும் இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| | **பிரிவு–2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக**<br>**(இரண்டு கருத்துகள் இருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | 2 x 2 =4 |
| 19 | தமிழ்நாட்டின் மாநில மரம்<br>• தமிழ்நாட்டின் மாநில மரம் பனை மரம்.<br>• சிறந்த காற்றுத் தடுப்பான்.<br>• நிலத்தடி நீரைச் சேமித்து வைக்கின்றது, பனை வளர அதிக தண்ணீர் தேவையில்லை.<br>• பதநீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்ற பொருட்கள் கிடைக்கின்றன.<br>**(எவையேனும் இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 20 | உ.வே.சா – பயின்ற கல்வி முறை<br>• உ.வே.சா அவர்கள் தனி நிலையில் புலவரிடத்து உயர்நிலைக்கல்வி முறையில் கல்வி பயின்றார்.<br>• இவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரிடம் பாடம் பயின்றார். | 1<br>1 |
| 21 | பெண் அதிகாரிகளின் பெயர்கள்<br>• எருதந் குஞ்சிர மல்லி, சோமயன் அமிர்த வல்லி என்னும் பெண் அதிகாரிகளின் பெயர்கள் காணப்படுகின்றன.<br>• ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் கல்வியிலும், தொழிலிலும் சிறந்து விளங்கினார்கள் என்பதைக் கல்வெட்டு மூலம் அறியலாம். | 1<br>1 |
| | **பிரிவு–3**<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | 7 x 2=14 |
| 22 | ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக<br>(அ) **செங்கயல்** = செம்மை +கயல்<br>செம் + கயல் – ஈறு போதல்<br>செங் + கயல் – முன்னின்ற மெய் திரிதல்.<br>**(அல்லது)**<br>(ஆ)அணிந்துரை = அணிந்து + உரை<br>விதி 1 – உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும் – அணிந்த்+உரை<br>விதி 2 – உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – அணிந்துரை | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 23 | **சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடர் அமைக்க**<br>**<u>தங்கை</u>**<br>• **<u>தங்கை</u>** – எனக்கு இரண்டு **தங்கை**கள் உள்ளனர்<br>• **தம் + கை** – ஆசிரியர் வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் **தம் கை**களால் பரிசு வழங்கினார்.<br><br>**(அல்லது)**<br><br>**<u>கால்நடை</u>**<br>• **கால்நடை** – **கால்நடை**களை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டு போனார்கள்.<br>• **கால் + நடை** – சிறிய தொலைவைக் கடக்கக் **கால் நடை**யாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.<br>**(பொருத்தமான வேறு தொடர்கள் சேர்த்தும், பிரித்தும் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br><br><br><br>1<br>1 |
| 24 | **கலைச்சொல்லாக்கம்**<br>பொருள் தெரிந்த பிற மொழிச் சொற்களுக்குத் தாய் மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும், தேவையான இடத்தில் புதியச் சொற்களை உருவாக்கியும் தருவது கலைச்சொல்லாக்கம் எனப்படும். | 2 |
| 25 | பகுபத உறுப்பிலக்கணம்<br>**அறிந்து** – அறி +த் (ந்) + த் + உ<br>அறி – பகுதி<br>த் – சந்தி, ந் ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி.<br><br>**(அல்லது)**<br><br>**துய்த்தல்** – துய் + த் + தல்<br>துய் – பகுதி,<br>த் – சந்தி,<br>தல் – தொழிற்பெயர் விகுதி.<br>**(சொற்களைச் சரியாகப் பிரித்திருப்பின் ஒரு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br><br><br><br>1<br>1 |
| 26 | இச்சொற்களில் உள்ள இடைநிலைகள் **–** த், ட், ற், இன்.<br>இவை இறந்த காலத்தைக் குறிக்கின்றன. | 1<br>1 |
| 27 | **செய்தித்தொடர்**<br>மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை அழகானது. | 2 |
| 28 | மோனை **–** <u>வ</u>ளர்ந்துவளர்ந்து, <u>வ</u>ந்த.<br><u>வ</u>ளர்ந்துவளர்ந்து, <u>வா</u>டிவாடிப்<br>இயைபு **–** **<u>வெண்ணிலாவே</u>**, **<u>வெண்ணிலாவே</u>**. | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 29 | **காற்புள்ளி, வினாக்குறி அமையும் தொடர்**<br>மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை ?<br>**(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 30 | **இரண்டு சொற்றொடர் ஆக்குதல்**<br>• தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.<br>• மாலை நிலவு மனதை மகிழ்விக்கும். | 1<br>1 |
| | **பகுதி–III**<br>**பிரிவு–1** | |
| | **எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** | 2 x 4 =8 |
| 31 | **இடம்** : பெரியவன் கவிராயர் எழுதிய திருமலை முருகன் பள்ளு என்னும் நூலில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.<br>**பொருள்** : தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.<br>**விளக்கம்** : வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணைப் பாடும். மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வண்டின் இசைகேட்டு அமர்ந்திருப்பதால் தாமரைத் தடாகத்தில் மீன்கள் அச்சமின்றித் துள்ளிப் பாய்ந்து விளையாடுகின்றன. | 1<br>1<br>2 |
| 32 | **“கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது”**<br>• பழைமையான மதீனா நகரம் கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது.<br>• மதீனா நகரில் எந்தப் பொருளும் இல்லை என்று சொல்வதற்கு இல்லை.<br>• அப்படிக் கேட்போருக்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு.<br>• அவ்வள்ளல்களைவிடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம். | 1<br>1<br>1<br>1 |
| 33 | **சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் எனக் குறிப்பிடுவன :–**<br>• தமிழ் அன்னையைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், உழைத்து வியர்த்தவர்க்கெல்லாம் நிறைவான செல்வம் தந்து மகிழ்ந்தவள்.<br>• காற்றிலே ஏறி, கடலை, நெருப்பாற்றினை, மலை உச்சிகளைக் கடந்துசெல் எனக் கூறியவுடன் செல்லுகின்ற ஒரு பாடலைக் கபாடபுரங்களைப் பலி கொண்ட பின்னரும் காலத்தால் அழியாத தொன்மையான கனிமங்களின் வலிமையெல்லாம் சேரப் பாடத்தான் வேண்டும்.<br>• இத்தகைய தமிழன்னைக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும். | 1<br>2<br>1 |

| | | |
|---|---|---|
| 34 | • ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்.<br>• பறவைகளோடு பயணித்துச் சுதந்திரமாக எல்லையைக் கடப்பேன்.<br>• பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் பெயரிட்டு அழைப்பேன்.<br>• உதவிக்கரம் நீட்டும் கைகளிலும், நீளாத மனிதரிடமும் நட்புடன் இருப்பேன்.<br>• உலகம் கடல் போன்றது, அதில் நானும் ஒரு துளியாய் இரண்டறக் கலந்து இருக்க வேண்டும் என்று இன்குலாப் கூறுகிறார்.<br><br>**(நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| | **பிரிவு–2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** | 2 x 4=8 |
| 35 | **மலை, மனித வாழ்வில் சிறப்பிடம்**<br>• திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்.<br>• திராவிடர்களை, மலைநில மனிதர்கள் என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.<br>• "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது தொல்காப்பியம்.<br>• 'விண்பொருநெடுவரை குறிஞ்சிக் கிழவ' என்கிறது திருமுருகாற்றுப்படை<br>• பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.<br>• திராவிட பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்கள் அப்பழங்குடியினரின் மலை சார்ந்த மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.<br>• பழங்குடியினர் ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்.<br>• நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்.<br>**(நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |

| | | |
|---|---|---|
| 36 | **வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி:–**<br>• வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியம்.<br>• வேதியியல் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துவதால் புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத்தன்மை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.<br>• நம் முன்னோர்கள் வேதியியல் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தவில்லை.<br>• வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகியவற்றை நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்துத் தெளித்தால் பூச்சிகள் இல்லாமல் போய்விடும். | 1<br>1<br>1<br>1 |
| 37 | **ஜீவாவின் பேச்சுநடை**<br>• பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம்.<br>• அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும் பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.<br>• அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.<br>• விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து அமைத்துக் கொண்ட பாணி.<br>• வாண வேடிக்கைகாரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் இரண்டு கைப்பிடி விசயம் மட்டும் எடுத்துக் கொள்வார்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 38 | **இயற்கையுடன் உரையாடலைத் தம் சொந்த நடையில் குறைந்தது பத்து வரிகள் எழுதி இருப்பின் கருத்துக்கு ஏற்ப மதிப்பெண் வழங்கலாம்.** | 4 |
| | பிரிவு–3<br>எவையேனும் மூன்றனுக்கு விடை தருக | 3 x 4=12 |
| 39 | (அ) உருவக அணி<br>**அணிவிளக்கம் :**<br>உவமை, உவமேயம் என்ற வேறுபாடு தோன்றாது இரண்டும் ஒன்றே என்று கூறுவது உருவக அணி ஆகும்<br>**சான்று**<br>இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்<br>பார்தாக்கப் பக்கு விடும்<br>**அணிப்பொருத்தம்:**<br>பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு,‘கொடாமை’ என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும் என்று உருவகப்படுத்தப்பட்டுள்ளது. | 2<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | (அல்லது)<br><br>**(ஆ) அணியைச் சுட்டல்**<br>இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வரும் நிலையணி பயின்று வந்துள்ளது.<br>**அணி விளக்கம்**<br>செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருவது.<br>**சான்று விளக்கம்**<br>நோயையும் அதன் காரணத்தையும் நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.<br>**அணிப் பொருத்தம்**<br>இக்குறட்பாவில் ''நாடி'' என்னும் சொல் ''ஆராய்ந்து'' என்னும் பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளது. | 1<br><br>2<br><br>1 |
| 40 | இலக்கிய நயம் பாராட்டுக<br>**மையக்கருத்து :**<br>இயற்கை எழில் மிகுந்த மருத நிலத்தின் வளம் இப்பாடலில் பாடப்பட்டுள்ளது.<br>**மோனை :** தண்டலை – தாமரை<br>**எதுகை :** தண்டலை, கொண்டல்கள், தெண்திரை, வண்டுகள்.<br>**இயைபு :** தாங்க – நோக்க<br>**(ஏற்புடைய மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>3 |
| 41 | **பகுதி, விகுதி, இடைநிலை பயன்படுத்திச் சொற்கள் உருவாக்குதல்.**<br>• பாடினாள், பாடுகிறாள், பாடுவாள், பாடாள்.<br>• வரையினாள், வரைகிறாள், வரைவாள், வரையாள்.<br>**(எவையேனும் நான்கு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 42 | **மரபுச் சொற்களை தொடரில் அமைத்தல்**<br>• **அவசரக்குடுக்கை :** ஆசிரியர் வினாவை முழுமையாக கேட்பதற்குள் **அவசரக்குடுக்கை**யென விடை கூறக்கூடாது.<br>• **முதலைக்கண்ணீர் :** தாயை வீட்டை விட்டு விரட்டிய மோகன் 'தாயைக் காணவில்லை' என்று **முதலைக் கண்ணீர்** வடித்தான்.<br>• **கைதூக்கி விடுதல் :** நான் கடனில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது என் அண்ணன்தான் என்னைக் **கைதூக்கி** விட்டார்.<br>• **கானல் நீர்:** பல்தொழில் பெருக்கத்தால், விவசாயம் '**கானல் நீர்** ஆகி விடுமோ **?** 'என்ற அச்சம் ஏற்படுகிறது.<br>**(பொருத்தமான தொடர் இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>1<br><br>1<br><br>1 |

| | | |
|---|---|---|
| 43 | தமிழாக்கம் தருக<br>1. வேலை செய்யும் போது வேலை செய், விளையாடும் போது விளையாடு.<br>2. வாளின் முனையை விட எழுதுகோல் முனை கூர்மையானது.<br>3. ‘கண்ணுக்கு கண் என்பது உலகம் முழுவதையும் குருடாக்கிவிடும்.<br>4. என் அனுமதி இல்லாமல் என்னை எவரும் காயப்படுத்த முடியாது.<br>**(பொருத்தமான தமிழாக்கம் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.)** | 1<br>1<br>1<br>1 |
| | செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா<br>1. 1839<br>2. ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்கு<br>3. தாய்மொழி வழிக் கல்வி<br>4. சாந்தோம் | 1<br>1<br>1<br>1 |
| | பகுதி–IV<br>**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** | 3 x 6=18 |
| 44 | அ) காவடிச்சிந்து ஒரு வழி நடைப் பாடல்.<br>• சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலைதாசன், பாடிய உலகம் போற்றும் காவடிச்சிந்து.<br>• காவடிச்சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலைபோன்ற அகன்ற தோளில் சார்த்திக்கொள்கிறான் முருகன்.<br>• அந்தக் கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளத்தை அண்ணாமலையார் சொல்கிறார். கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவர் உலகை விட உயர்ந்து ஒளி வீசுகிறது.<br>• அவ்வொளி உலகங்கள் பலவற்றிலும் கண்கள் கூசும்படி பரவுகிறது.<br>• கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க, முருகன் கோவில் திகழ்கிறது.<br>• காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைக்கிறது.<br>• கழுகுமலை நகரின் கோட்டை உயரமானது. அதில் மேகங்கள் படிகின்றன.<br>• அவற்றிலிருந்து உருவாகும் மின்னல்கள் இருளைக் கிழிக்கின்றன.<br>• தமது நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்தினும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அருளைப் பெறுவார்; இன்பம் அடைவார்.<br>**(ஆறு கருத்துகள் இருப்பின் முழுமையான மதிப்பெண் வழங்கலாம்.)** | 6 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| | **ஆ) வாழ்வின் உயர்விற்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்குதல்**<br>• அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பிரிவுகளுடன் வாழ்வின் உயர்விற்கு தேவையான கருத்துக்களைக் கொண்டு வாழ்வின் அனைத்து நிகழ்வுகளையும் கூறும் காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது திருக்குறள்.<br>• **பொச்சாவாமை** – சோர்வின்றி முயலல்<br>கடமையை மறந்து மகிழ்ச்சியால் கெட்டவர்கள் பலர் அவர்களை நினைத்துப் பார்த்து நாம் சோர்வின்றி முயல வேண்டும்.<br>இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்<br>மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.<br>• **குறிப்பறிதல்** –<br>முகக்குறிப்பினால் உள்ளக் குறிப்புகளை உணர்ந்து கொள்பவரைப் பொறுப்புகள் எதைக் கொடுத்தாவது நாம் அவர்களைத் துணையாகக் கொள்ள வேண்டும்.<br>குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்<br>யாது கொடுத்தும் கொளல்.<br>• **பகைத்திறம் தெளிதல்** –<br>வில்வீரரின் பகையைப் பெற்றாலும் சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது.<br>• **மருந்து** –<br>ஒருவன் முன் உண்ட உணவு நன்கு செறித்த பிறகு தக்க அளவு உணவு உட்கொண்டால் அவனுக்கு மருந்து என்பது தேவையில்லை.<br>• **இரவச்சம்** –<br>பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.<br>**(பொருத்தமான விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 6 |
| 45 | **அ). பௌத்தக்கல்வி , சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி**<br>• கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய கொடைகள் சமணத்தின் தலையாய அறங்கள்.<br>• சமணத் துறவிகள் மலைக்குகையில் தங்கி, கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் போதித்தனர்.<br>• 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடை.<br>• வந்தவாசி அருகில் வேடல் என்னும் ஊரில் சமணப்பெண் ஆசிரியர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.<br>• பட்டினிக்குரத்தி என்ற சமணப்பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளி ஒன்றை நிறுவினார்.<br>**(ஏதேனும் மூன்று கருத்துகள் எழுதியிருப்பின் மூன்று மதிப்பெண் வழங்கலாம்.)** | 3 |

| | | |
|---|---|---|
| | **மரபு வழிக் கல்வி முறைகள் :**<br><br>**குருகுலக் கல்விமுறை :**<br>• ஆசிரியர்களுடன் தங்கி, அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றல்.<br>• செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படை.<br>**திண்ணைப் பள்ளிக்கல்விமுறை :**<br>• 'தெற்றிப் பள்ளிகள்' என்று அழைக்கப்பட்டன.<br>• இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன.<br>**உயர்நிலைக் கல்விமுறை :**<br>• தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் முறை. | 1<br><br>1<br><br>1 |
| | **(அல்லது)** | |
| | **ஆ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு உணர்த்தும் செய்திகள்.**<br>• ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.<br>• பண்பாடு, சமயம், சாதி, நீதி, நம்பிக்கை முதலாக பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.<br>• நீதி வழங்குதல், தண்டனை வழங்குதல் (காது அறுத்தல், சாட்டை அடி, கிடங்கில் போடுதல்) போன்ற பதிவுகள் இவரது நாட்குறிப்பில் உள்ளன.<br>• கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்தது.<br>• புதுச்சேரியில் பேரிடர் நிகழ்ந்தபோது ஒழுகரையிலே கனகராயர் பெருஞ்சோறு அளித்ததைப் பதிவு செய்துள்ளார்.<br>• எட்டு மாற்றுக்குறைவான நாணயங்களை வைத்திருப்பது குற்றம்.<br>• பல்வேறு விதமான வராகன்களை ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.<br>• ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.<br>• துணிகள், வர்த்தகர்களுக்கு விற்கப்படும் போது இரசீது பெறப்பட்டது.<br>**(ஆனந்தரங்கர் நாட்குறிப்பு தொடர்பான ஆறு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 6 |
| 46. | அ) சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகள்<br>(பொருத்தமான கருத்துகளைத் தொகுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.) | 6 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| | **ஆ)பாரதியின் இதழாளர் முகம் குறித்து அறிவன**<br>• இதழாசிரியர் பாரதி<br>• புனைப் பெயர்கள்<br>• நேரமேலாண்மை<br>• கருத்துப் படங்கள்<br>• இதழியல் முன்னோடி<br>• புரட்சியாளர் பாரதி | 6 |
| **பகுதி – V**<br>**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக** | | 4+2=6 |
| 47 | **அ)** ஆக்கியோன் பெயரே வழியே எல்லை<br>நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே<br>கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்<br>வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே. | 4 |
| | ஆ) **“ செயல் என முடியும் குறள்’’**<br><br>வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்<br>துணைவலியும் தூக்கிச் **செயல்.**<br><br>**(அல்லது)**<br><br>நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்<br>வாய்நாடி வாய்ப்பச் **செயல்.** | 2 |